Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.107/2025

Dated 25-02-2026
Deposition of witness for : PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கேசவன் | வயது | : | 62 |
| தந்தை பெயர் | : | ராஜப்பா | தாலுக்கா | : | பூதலூர் |
| கிராமம் | : | செங்கிப்பட்டி | தொழில் | : | வி.ஏ.ஓ. (ஓய்வு) |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1,2,3 absent 355 BNSS Petitions filed and allowed.**

**L.D. Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது செங்கிப்பட்டியில் குடியிருக்கிறேன்.

2) என்னிடம் காட்டப்படும் 1வது எதிரி விஜயகாந்தியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

3) கடந்த 26.2.2019 அன்று நான் என்னுடைய செங்கிப்பட்டி வி.ஏ.ஓ அலுவலகத்தில் நானும்

என் உதவியாளர் கணேசனும் இருந்தோம். அப்போது செங்கிப்பட்டி ஆய்வாளர் எனக்கு போன் செய்து காவல்நிலையம் வரசொன்னார். நானும் என் உதவியாளரும் சென்றோம். அங்கு எதிரி விஜயகாந்தை ஆய்வாளர் விசாரித்து கொண்டிருந்தார். விசாரித்து முடித்த பிறகு என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நானும் என் உதவியாளரும் கையெழுத்து போட்டோம்.

4) விஜயகாந்தை விசாரிக்கும்போது நான் வெளியில் இருந்தேன். கொலை வழக்கு சம்பந்தமாக விசாரித்துகொண்டிருந்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரிக்கும்போது திருமலைசமுத்திரம் பஸ் ஸ்டாப்பில் கையில் சாக்கு மூட்டையுடன் இருவர் நின்றுகொண்டிருந்தார்கள் என்றும் அவர்களை பூதலூர் காவல்நிலைய ஆய்வாளர் விசாரித்துகொண்டிருந்தார்கள் என்றும் அந்த இரண்டு பேரும் முன்னுக்கு பின் முரணாக பதில் சொல்லிக்கொண்டிருந்தார்கள் என்றும் அவர்கள் இளஞ்சிறார்கள் என்பதால் அவர்களில் கபாலி என்கிற தமிழரசன், கர்ணன் ஆகியோர்கள் ஆவார்கள் என்றும் அவர்கள் தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும்,

2) அதன்பின்பு 26.02.2019 ம் தேதி காலை 6.30 மணிக்கு வல்லம் பஸ்ஸ்டாண்டில்

நின்றுக்கொண்டிருந்த 1வது எதிரி விஜயகாந்தை பூதலூர் ஆய்வாளர் மேற்படி வழக்கில் கைது செய்து விசாரித்தபோது அவர் தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் நானும் என் உதவியாளர் கணேசனும் சாட்சி கையொப்பம் போட்டதாக விசாரிக்கும்போது சொல்லி விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல-

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் தெரிவித்தார்.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்